05.02.2026 OS.No.75/2022 PW1 Name :.**மேனகா**

8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்துகள் ஆதியில் பெருமாள் கவுண்டர் என்பருக்கு சொந்தமானது ஆகும். அவருக்கு மொத்தம் 4 பெண்கள், 3 ஆண்கள் வாரிசுகள் ஆவார்கள். ஜெயம்மாள், மணியம்மாள், ருக்குமணி, ஜோதி என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்ற தெரியாது. பெருமாள் கவுண்டரின் மனைவி தாயாம்மாள் எப்போது இறந்தார் என்று தெரியாது.
2. இன்றைய தேதிவரை பெருமாள் கவுண்டரின் வாரிசுகளுக்கு இடையில் எழுத்துமூலமான பாகபிரிவினை எதுவும் ஏற்படவில்லை. வாய்மொழியாக தான் ஏற்பட்டுள்ளது. எந்த தேதியில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்பது தெரியாது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டுள்ளது. அது என் தகப்பனார் நடராஜன் சொல்லிதான் எனக்கு தெரியும். யார் மூலமாக அந்த பாகபிரிவினை ஏற்பட்டது என்பதை சொல்லியுள்ளார். ஊர் கவுண்டர் மாணிக்கம் முன்னிலையில் அது நடந்துள்ளது.
3. அவர் தற்போது உயிருடன் இல்லை. அந்த விவரத்தை வழக்குரையிலும் முதன்மை சாட்சியத்திலும் கூறவில்லை. இந்த வழக்கில் ஜெயம்மாள், மணியம்மாள், ருக்குமணி, ஜோதி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. வழக்கு சொத்துகள் பத்திரம் மூலமாக பாத்தியபட்டதா அல்லது பட்டா மூலமாக பாத்தியபட்டதா என்பது எனக்கு தெரியுமா என்றால் இரண்டும் மூலமாக பாத்தியபட்டது.

4. பத்திரம் மூலமாக பாத்தியபட்ட சொத்துகள் பெருமாள் பெயரில் உள்ளது. பெருமாள் பெயரில் உள்ள பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அது எந்த ஆண்டு பத்திரம் என்று எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் எத்தனை அயிட்ட சொத்து குறிப்பிடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் 3 அயிட்டங்களாக உள்ளது. அதைவிட அதிகமாக சொல்லவில்லை. சாட்சி மீண்டும் வழக்கில் எத்தனை அயிட்டங்களாக சொத்து காட்டபட்டுள்ளது என்பது நினைவு இல்லை என கூறுகிறார்.
5. சர்வே எண்கள் தற்போது எனக்கு தெரியாது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு சொத்து விஸ்தீரணம் உள்ளது என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் போட்டுள்ள பதில் பற்றி எனக்கு தெரியாது. மல்லிகா என்னுடன் தான் உள்ளார். அவருக்கும் எனக்கும் விரோதம் இல்லை. அவருக்கும் எனக்கும் பாகபிரிவினை பிரச்சனை உள்ளது. வாய்மொழி பாகபிரிவினைக்கு கூர்சீட்டு ஆவணம் எதுவும் எழுதபடவில்லை.
6. வழக்கு சொத்து எனக்கு பாத்தியபட்டது என்பதை காட்டுவதற்கு எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் இல்லை. சண்முகம் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. சொத்து என்னிடம் தான் உள்ளது. திருமணமானதிலிருந்து நான் திம்மாம்பேட்டை, நாராயணபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அங்கிருந்து சுமார் 9 கி.மீ தொலைவில் வழக்கு சொத்து உள்ளது. கடந்த 35 ஆண்டுகளாக நான் என் கணவர் வீட்டில்தான் குடியிருக்கிறேன்.
7. சண்முகம் சுவாதீனத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சண்முகம் 1300 சதுரடியில் குடியிருப்பதாக இதே நீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கு போட்டிருந்தார் அது பொய் வழக்கு

ஆகும். 400 சதுரடி தான் அவருக்கு கொடுக்கபட்டுள்ளது. அந்த 400 சதுரடி சொத்து இன்றைய தேதிவரை நான் எந்த வழக்கும் போடவில்லை. அந்த 400 சதுரடி சொத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

8. வழக்கில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் தொடர்பாக வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்துகள் என்னுடைய சுவாதீனத்தை காட்டகூடிய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவற்றை வாங்கவிடாமல் பால்ராஜ் தடங்கல் செய்துவிட்டார். பெருமாளுக்கு மொத்தம் 1 1/2 ஏக்கர் சொத்து பாத்தியபட்டது.

9. பெருமாள் கவுண்டர் விட்டு சென்றதும் அந்த சொத்து தான். அந்த 1 1/2 ஏக்கர் சொத்திற்காக தான் இந்த வழக்கு போட்டுள்ளேன். அந்த 1 1/2 ஏக்கருக்கு குறைவாக வழக்கில் சொத்து காட்டபட்டிருந்தால் அது தவறான வழக்கு ஆகும். அந்த 1 1/2 ஏக்கர் சொத்தில் பெருமாள் கவுண்டரின் அனைத்து வாரிசுகளுக்கும் சொத்தை பிரித்து கொடுக்கவேண்டும் என்று தான் இந்த வழக்கை போட்டுள்ளேன். வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 05/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.05 16:37:45 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.